**நெழுவ பிரதேச சபை**
**காலி மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 23 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை 2018 ஆகஸ்ட் 31 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்ந்து, நெழுவ பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(அ) கொள்வனவு செய்திருந்த மற்றும் நன்கொடையாக கிடைத்திருந்த சொத்துக்களின் கூட்டுப்பெறுமதி ரூபா 47,628,359 தொகையினை மூலதனப்படுத்தியிருக்கவில்லை.

(ஆ) முன்னைய ஆண்டின் போது செலுத்தியிருந்த 04 நிர்மாண வேலைகளுக்கான ரூபா 343,399 இற்கான பெறுமதி கடன்கொடுத்தோரின் கீழ் காட்டப்பட்டிருந்ததுடன், 03 நிர்மாண வேலைகளுடன் தொடர்புடைய மூலதன கடன்கொடுத்தோர் பெறுமதி ரூபா 229,625 தொகை மிகையாகவும் மற்றும் பலவின கடன்கொடுத்தோர் ரூபா 204,029 தொகை குறைவாகவும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது பணம் கிடைத்திருந்த 02 நிர்மாண வேலைகள் தொடர்பான ரூபா 879,942 இற்கான பெறுமதியினை தொடர்ந்தும் மூலதன கடன்பட்டோரின் கீழ் காட்டப்பட்டிருந்ததுடன், 04 நிர்மாண வேலைகள் தொடர்பான மூலதன கடன்பட்டோரின் பெறுமதி ரூபா 165,525 தொகை மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெற வேண்டிய ஒரே முறையில் பெறும் பணம் ரூபா 341,100 தொகை குறைவாகவும் மற்றும் வாராந்த சந்தையின் வாடகை வருமானம் ரூபா 56,826 தொகை மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(உ) நிலையான சொத்துக் கணக்கு மற்றும் மூலதன செலவீட்டிற்காக அரசிறை உதவுத் தொகை கணக்குகள் இடையே ரூபா 517,000 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது.

(ஊ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய ரூபா 7,097,824 இற்கான ஓய்வூதியப் பங்களிப்புத் தொகையினை கணக்கீடு செய்திருக்கவில்லை.

**1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

நிதிக்கூற்றுக்கள் காணப்படுகின்ற கூட்டுத்தொகை ரூபா 63,171,769 தொகைக்கான 10 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் அதனோடு தொடர்புடைய துணைப் பதிவேடு அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே கூட்டுத்தொகை ரூபா 2,892,979 தொகைக்கான சமமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

**1.3.3 தொங்கல் கணக்கு**

பல வருட காலம் முதல் முன் கொண்டு வந்து காணப்படும் ரூபா 72,839 தொகைக்கான தொங்கல் கணக்கின் செலவு மீதியை இனங்கண்டு தீர்த்திருக்கவில்லை.

**1.3.4 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்கு**

**(அ) பெற வேண்டிய கணக்குகள்**

(i) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிர்மாண வேலைகள் தொடர்பாக பெற வேண்டிய கூட்டுத்தொகை ரூபா 8,202,379 தொகைக்கான மீதியில் 03 வருட காலம் முதல் காணப்படும் கூட்டுத்தொகை ரூபா 3,572,193 தொகைக்கான 07 மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) 2008 ஆண்டு முதல் முன் கொண்டு வந்து காணப்படும் வாராந்த சந்தை தற்காலிக மற்றும் நிரந்தர கடைகள் தொடர்பாக ரூபா 547,800 இற்காக நிலுவை ஒரே தடவையில் செலுத்தும் பணத்தை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய கூட்டுத்தொகை ரூபா 6,970,662 தொகைக்கான கடன் கொடுத்தோர் மீதியில் 03 வருட காலம் முதல் காணப்படும் கூட்டுத்தொகை ரூபா 3,183,162 தொகைக்கான 03 மீதிகளை தீர்த்திருக்கவில்லை.

**1.3.5 கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

தேவையான தகவல்கள் சமர்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 1,600,707 தொகைக்கான 09 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்வதற்கு முடியாதுள்ளது.

**1.3.6 இணக்கமின்மை**

**1.3.6.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத தீர்மானங்களுடன் இணக்கமின்மை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மை |
| --- | --- |
| (அ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி | |
| (i) விதி 145 | திருப்பி செலுத்த வேண்டிய வைப்புக்கள் தொடர்பாக விரிவான கூற்றொன்று தயாரித்து பேரேட்டில் காட்டப்பட்டுள்ள மீதியுடன் சீராக்கல் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. |
| (ii) விதி 164 | சபையின் கணக்கு ஆவணங்கள் செயலாளரினால் அதிகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரினால் அல்லது அவரினால் நாளாந்தம் பரிசோதனை மேற்கொண்டு அதில் அடங்கியுள்ள பதிவுகள் சரியானவை என சான்றுபடுத்தியிருக்கவில்லை. |
| (iii) விதி 217 | சபைக்கு சொந்தமான காணிகள் மற்றும் கட்டிடங்கள் ஆண்டிற்கு ஒருமுறையேனும் பரிசோதனை மேற்கொண்டு அறிவித்திருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணம் | |
| (i) நிதிப்பிரமாணம் 103,104 | காணாமல் போதல், சேதமடைதல் தொடர்பாக நடவடிக்கை எடுத்து அந்த அறிக்கை கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டி ருக்காததுடன், சேதங்கள் தொடர்பாக பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 373 | 2004 ஆண்டின் போது பெற்றிருந்த ரூபா 62,125 தொகைக்கான தீர்க்கப்படாத முற்பண மீதி ஒன்று காணப்பட்டது. |
| (இ) 2015 ஜுலை 10 திகதிய 02/2015 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | செயற்படாது காணப்பட்ட கை டிரக்டர் மற்றும் ஆட்களை உயர்த்தும் இயந்திரம் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்க வில்லை. |
| (ஈ) 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | சபைக்கு சொந்தமான 13 வாகனங்களின் எரிபொருள் எரிவு பரிசோதனை செய்திருக்கவில்லை. |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 134,952 தொகையாக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,620,948 ஆகக் காணப்பட்டது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

நடைமுறை கணக்கு தொடர்பாக காசேட்டின் மீதி மற்றும் நடைமுறை கணக்கின் மீதி இடையே ரூபா 40,833 இற்கான இனங்காணப்படாத வித்தியாசம் காணப்பட்டது.

### 2.3 வருமான நிருவாகம்

#### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பாக தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| வருமான மூலம் | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பீட்டு வருமனம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமனம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 430,000 | 288,080 | 324,845 | 42,005 | 430,000 | 429,840 | 415,442 | 78,770 |
| வாடகை | 6,154,800 | 4,036,189 | 4,074,856 | 202,418 | 6,218,750 | 5,956,293 | 5,947,604 | 241,085 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 125,000 | 189,444 | 193,449 | 40,295 | 145,000 | 76,457 | 74,007 | 44,300 |
| ஏனைய வருமானங்கள் | 5,508,000 | 3,903,940 | 5,400,513 | 3,976,978 | 5,625,500 | 4,201,701 | 1,289,067 | 5,473,551 |
| | 12,217,800 | 8,417,653 | 9,993,663 | 4,261,696 | 12,419,250 | 10,664,291 | 7,726,120 | 5,837,706 |

#### 2.3.2 வருமானம் சேகரித்தலின் செயலாற்றுகை

மீளாய்வாண்டிற்கான மதிப்பீட்டு மொத்த வருமானம் ரூபா 12,217,800 தொகையாக காணப்பட்டதுடன், சிட்டையிடப்பட்ட வருமானம் ரூபா 8,417,653 தொகையாக காணப்பட்டது. ரூபா 5,837,706 தொகை ஆரம்ப நிலுவையுடன் அறவிடப்பட வேண்டிய மொத்த தொகை ரூபா 14,255,359 தொகையாக காணப்பட்ட போதிலும், ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட மொத்த வருமானம் ரூபா 9,993,663 தொகை காணப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு மொத்த நிலுவை ரூபா 4,261,696 தொகை ஆக காணப்பட்டது.

**2.3.3 வீதவரியும் வரியும்**

**ஏக்கர் வரி**

ஆரம்ப நிலுவை ரூபா 21,370 தொகையாக காணப்பட்டதுடன், ஆண்டிற்கான சிட்டையிடல் ரூபா 5,130 தொகையுடன் ரூபா 26,500 தொகை அறவிடப்பட வேண்டிய காணப்பட்டது. மீளாய்வாண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 3,160 தொகையாக காணப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 23,340 தொகை நிலுவையாக காணப்பட்டது.

**2.3.4 கடை வாடகை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஆரம்ப நிலுவை ரூபா 241,085 தொகையாக காணப்பட்டதுடன், ஆண்டிற்கான சிட்டையிடல் ரூபா 4,036,189 தொகையுடன் ரூபா 4,277,274 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. மொத்த அறவீடுகள் ரூபா 4,074,856 தொகையாக காணப்பட்டமையால், வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 202,418 தொகை நிலுவையாகக் காணப்பட்டது.

(ஆ) 2017 ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட புதிய பெறுமதி மதிப்பீட்டின் பிரகாரம் வாடகை அறவிடப்படாமையால் :ரூபா 1,054,956 இற்கான நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

**2.3.5 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு முத்திரைக் கட்டணம் ரூபா 3,500,000 தொகை மற்றும் நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 304,231 தொகை கிடைக்க வேண்டியிருந்தது என அவதானிக்கப்பட்டது.

**3 செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றுகை மதிப்பீடு செய்தல்**

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்களின் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் தொடர்பாக கருமங்களை முறைப்படுத்துதல் மற்றும் கட்டுப்படுத்துதல் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகள் நிறைவேற்றுவது தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டத்தை அடையப்படாமை**

2016 பிரதேச சபைகளை வலுப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 04 நிர்மாண வேலைகள் நிறைவேற்றுவதற்காக ரூபா 1,348,163 தொகை அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், ரூபா 1,000,000 இற்கான முற்பணத் தொகையில் ரூபா 252,784 இற்கான தொகையொன்று மாத்திரம் செலவிடப்பட்டு ஒரு நிர்மாண வேலை மாத்திரம் நிறைவேற்றப்பட்டிருந்தது.

**(ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரலில் நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்காகிய உலகலாவிய சுட்டிகளின் மூலம் சபையின்

அதிகார பிரதேசத்தில் பொது மக்களின் வாழ்க்கை நிலைமை மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்காக நீண்டகால திட்டம் சபையினால் தயாரித்திருக்கவில்லை.

**3.2 முகாமைத்துவ திறமையின்மை**

தென்மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2010 திசெம்பர் 27 திகதிய தபபா/பபாகொ/2010/1 கொண்ட சுற்றறிக்கையின் பிரிவு 4 இன் பிரகாரம் சபையினால் வாடகைக்கு கொடுத்துள்ள அனைத்து கடைகளுக்கும் மாதாந்த வாடகையினை போல 100 தவணை பெறுமதியான ஒரு தடவையில் செலுத்தும் பணம் அறவிடப்பட வேண்டுமெனினும் 03 மாதங்களுக்கான கடை வாடகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

**3.3 மனித வள முகாமைத்துவம்**

**ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் மிகைகள்**

ஆளணி திட்டத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் 11 வெற்றிடங்கள் மற்றும் 04 மிகைகள் காணப்பட்டன.

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.4.1 விளைவற்ற/ குறை பயன்பாட்டு சொத்துக்கள்**

பயன்படுத்தக் கூடியதாகக் காணப்பட்ட டிரக்டர் வண்டி ஒன்று ஒரு வருட காலம் முதல் மோட்டார் சைக்கிள்கள் ஒன்று 02 வருட காலம் முதல் விளைவற்று காணப்பட்டது.

**3.5 ஒப்பந்த வேலை நிர்வாகம்**

தென் மாகாண பிரதான செயலாளரின் 2009 ஜுன் 04 ஆம் திகதிய நிபிலே/இஞ்சே/சுற்றறிக்கை கொண்ட கடிதத்தின் 4 ஆம் பந்தியின் பிரகாரம் ஊருக்கு ஊர் வீட்டுக்கு வீடு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ரூபா 1,234,654 தொகைக்கான தெல்லவ எந்தவெவ குறுகிய பாலத்தை நிர்மாணிப்பதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு, மாவட்ட பொறியியலாளர் (உள்ளூராட்சி) அங்கீகாரம் பெற்றுக் கொள்ளாமல் நிறைவேற்றப்பட்டிருந்ததுடன், இதன் முடிவுற்ற வேலைகளின் பெறுமதி ரூபா 1,160,577 தொகை ஆக காணப்பட்டது.

**4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மற்றும் உள்ளவாறான வருமானங்கள் மற்றும் செலவுகளிடையே கீழே விபரிக்கப்பட்டுள்ளவாறு கணிசமான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால், பாதீடு ஆக்கபூர்வமான நிதி முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(அ) 08 செலவு விடயங்களின் கூட்டுத்தொகை ரூபா 8,101,781 தொகைக்கான சேமிப்பு காணப்பட்டதுடன், அப் பெறுமதி 15 சதவீதம் முதல் 100 சதவீதத்திற்கு இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது.

(ஆ) 06 வருமான விடயங்கள் நெருங்கியிருந்த இலக்குகளின் கூட்டுத்தொகை ரூபா 8,539,956 தொகையாகக் காணப்பட்டதுடன், அப்பெறுமதி 02 சதவீதம் முதல் 51 சதவீதம் வரையான வீச்சில் இருந்தது.

**4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள்**

2009 ஜூன் 09 ஆம் திகதி DMA/2009(i), இலக்கம் கொண்ட முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நிறுவி இருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதி வரை கூட்டங்கள் நடாத்தியிருக்கவில்லை.

**4.3 உள்ளக கணக்காய்வு**

உள்ளக கணக்காய்வு தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணம் 133 மற்றும் 134 ஆகிய பிரமாணங்களை காட்டப்பட்டுள்ள மற்றும் தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2014 பெப்ரவரி 24 திகதிய தபபா/யஹ/01/நசலே இலக்கங் கொண்ட சுற்றறிக்கையின் பிரகாரம் போதிளவு உள்ளக கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**5 முறைமைகள் மற்றும் கட்டுபாடுகள்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதுடன், பின்வரும் கட்டுபாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| முறைமை | குறைபாடு |
|---|---|
| (அ) நிலையான சொத்துக்கள் | (i) சபைக்குச் சொந்தமான காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக கணிப்பீடு ஒன்று மேற்கொண்டு அவற்றின் பெறுமதியின் பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்திருக்காமை.<br>(ii) சபைக்கு சொந்தமான சனசமூக மண்டபங்கள், மயானங்கள் மற்றும் பொது இடங்கள் தொடர்பாக தகவல்களை உட்படுத்தி பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்காமை.<br>(iii) சேதங்கள் மற்றும் நட்டங்கள் தொடர்பாக பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்காமை. |
| (ஆ) பதவியணி முகாமைத்துவம் | வெற்றிட பதவிகள் மற்றும் மிகை ஊழியர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்காமை. |
| (இ) வருமானம் சேகரித்தல் | நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்கு முறையான வேலைத்திட்டமொன்று தயாரித்து செயற்படுத்தியிருக்காமை. |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | கணக்கீடு மற்றும் பதிவேடுகள் பேணப்படல் | (i) | முன்னைய ஆண்டுகள் முதல் காணப்படும் மீதிகள் தொடர்பாக கவனம் செலுத்தி தீர்ப்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்காமை. |
| | | (ii) | மீளாய்வாண்டின் போது தொங்கல் கணக்கின் மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்காமை. |
| (உ) | முகாமைத்துவ திறமையின்மை | (i) | குப்பை முகாமைத்துவத்தை முறைப்படுத்தாமை. |
| | | (ii) | வாகனங்களின் உரிமையை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்காமை. |
| (ஊ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | (i) | வருடாந்த பாதீட்டின் மூலம் ஏற்பாடுகள் ஒதுக்கியிருந்த அனைத்து செலவு விடயங்களிலும் சேமிப்புக்கள் காணப்படல். |
| | | (ii) | 06 வருமான விடயங்களின் பாதீட்டில் காட்டப்பட்டிருந்த வருமான இலக்குகளை நெருங்கியிருக்காமை. |
| | | (iii) | செலவுகள் மற்றும் வருமானம் தொடர்பாக தொடர் நடவடிக்கை மேற்கொண்டு பாதீட்டை திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்காமை. |